பக்கங்கள் – 15
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 112

செவ்வாய்கிழமை
18 மார்ச் 2025

பங்குனி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மீனவர்கள் மாயம் தேடல்கள் தீவிரம்

யாழ்ப்பாணம், மார்ச் 18
யாழ்ப்பாணம் ஊர்கா வற்றுறைப் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இரு 11

# புலிகளுக்குத் தடையை நீடித்தது இந்தியா

இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்

**புதுடில்லி, மார்ச் 18**
**தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பதாக இந்திய மத்திய அரசாங்கம் அறிக்கையிட்டுள்ளது. தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் மீதான திருத்தப்பட்ட பட்டியலிலேயே புலிகளுக்குத் தடை விதிப்பதாக இந்திய மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.** 11

யாழில் இலஞ்சம் பெற்ற

## பொலிஸ் அதிகாரியின் மகன் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 18
யாழ்ப்பாணத்தில் இலஞ்சம் பெற்ற பொலிஸ் அதிகாரியின் மகன், சட்டத்தரணி மூலம் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையான நிலையில், அவரை எதிர்வரும் 14 நாள்களுக்கு 11

இலங்கையில் விரைவில்

## ஆழ்கடல் மீன்பிடி ஊக்குவிக்கப்படும்

கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18
இலங்கையில் கடற்றொழில்துறை நவீனமயப்படுத்தப்படும். ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கை ஊக்குவிக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் 11

## யாழ். நகர்ப் பகுதியில் ஒருவர் சடலமாக மீட்பு

வவுனியா, மார்ச் 18
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் நேற்று ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ராமன் யோகராஜா (வயது-40) என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். 11

## தொல்லியல் திணைக்களம் நாட்டின் ஊழலின் சின்னம்!

ரவிகரன் எம்.பி. நேற்றுச் சாட்டை



முல்லைத்தீவு, மார்ச் 18
பௌத்த விகாரை ஒன்றையும், அசோகச்சக்கரத்தையும் தனது சின்னமாகக் கொண்ட இலங்கை தொல்பொருள் திணைக்களம், எவ்வாறு இலங்கையில் உள்ள 09

சா/த பரீட்சை எழுதிய முதல்நாளில்

## மாணவ, மாணவிகளிடம் மர்மநபர்கள் அத்துமீறல்

யாழ்ப்பாணம், மார்ச் 18
யாழ்ப்பாணத்தில் க.போ.த.சாதாரணதரப் பரீட்சை எழுதிவிட்டுத் திரும்பிய மாணவ, மாணவிகளிடம் உயர்தர வகுப்புகளுக்கான விளம்பரக் கையேடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு மர்ம நபர்கள் 09

## தென்னக்கோனின் பிடிமனு தள்ளுபடி

05

எதிர்வரும் ஒரு வருடத்துக்குள்

## புதிய அரசியலமைப்பை விரைந்து உருவாக்குக!

பிரதான எதிர்க்கட்சி அழுத்தம்

கொழும்பு, மார்ச் 18
புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்குரிய பணியை அரசாங்கம் விரைவில் ஆரம்பிக்க வேண்டும். எதிர்வரும் ஒரு வருடத்துக்குள் அந்தப் பணிகள் முழுமைப்படுத்தப்பட வேண்டும் என்று பிரதான 11



## நாடெங்கும் தாதியர் நேற்றுப் போராட்டம்

வடக்கிலும் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18
வடக்கு கிழக்கு உட்பட, நாடெங்கிலும் உள்ள அரச மருத்துவமனைகளில், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துத் தாதியர்கள் நேற்றுப் 11

## பஞ்சாயுதத்தில் வீரவன்ஸ!

கொழும்பு, மார்ச் 18
உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தேசிய சுதந்திர முன்னணி தனித்து 'பஞ்சாயுதம்' சின்னத்தில் போட்டியிடவுள்ளது என்று அதன் தலைவரும், முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று 11

## விரைவில் அரசியலமைப்பு உருவாக்கப்படுவது உறுதி

நீதி அமைச்சர் ஹர்ஷன நம்பிக்கை 11



'இல்லாத புலியளுக்கு தடை போடுறதில உவையள் விண்ணர் கண்டியளோ'

## வவுனியா தேவகுளத்தில் இளைஞர் சடலமாக மீட்பு

வவுனியா, மார்ச் 18
வவுனியா தேவகுளம் வயல்வெளியில் இளைஞர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
மறவன்குளம் பகுதியைச் சேர்ந்த 11

## யாழ்ப்பாணப் பல்கலையின் பட்டமளிப்பு விழா புதனன்று!

4 நாள்கள்: 13 அமர்வுகள்
3,920 பேருக்குப் பட்டங்கள்



யாழ்ப்பாணம், மார்ச் 18
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நாளை புதன்கிழமை முதல் 22ஆம் திகதி சனிக்கிழமை வரை நான்கு நாள்கள் பதின்மூன்று அமர்வுகளாகப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.
இந்தப் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹனை ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 17.03.2025 | திகதி 17.03.2025 | திகதி 17.03.2025 | திகதி 17.03.2025 | திகதி 17.03.2025 | திகதி 17.03.2025 | திகதி 17.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4020 | சீட்டிழுப்பு இலக்கம் 1087 | சீட்டிழுப்பு இலக்கம் 046 | சீட்டிழுப்பு இலக்கம் 2126 | சீட்டிழுப்பு இலக்கம் 5778 | சீட்டிழுப்பு இலக்கம் 1808 | சீட்டிழுப்பு இலக்கம் 0353 |
| ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கினம் தனுசு | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து D | ஆங்கில எழுத்து G | ஆங்கில எழுத்து O | ஆங்கில எழுத்து G |
| வெற்றி இலக்கங்கள் 10 20 26 36 | வெற்றி இலக்கங்கள் 13 24 49 51 | வெற்றி இலக்கங்கள் 6 3 8 6 | சுப்பர் இலக்கம் 19 | வெற்றி இலக்கங்கள் 7 3 0 6 2 9 | வெற்றி இலக்கங்கள் 12 48 49 71 | வெற்றி இலக்கங்கள் 0 6 2 9 |
| விசேட எழுத்து Z | | | வெற்றி இலக்கங்கள் 27 31 58 67 | | விசேட எழுத்து O | |

# நோயாளிகளைப் பணயம் வைத்தால் மக்களின் பக்கம் நின்றே தீர்மானம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 18

**நோயாளிகளைப் பணயக்கைதிகளாக வைத்து சுகாதார சேவைகளைச் சீர்குலைக்கும் வகையில் யாரேனும் செயற்பட்டால், அரசாங்கம் பொதுமக்களின் பக்கம் நின்று அவர்களுக்குச் சார்பான தீர்மானங்களை எடுக்கக் கடமைப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். உலக சிறுநீரக தினத்தை முன்னிட்டு அகில இலங்கை சிறுநீரக நோயாளிகள் சங்கத்தால் அண்மையில் ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மக்களின் பக்கம் நின்று அவர்களுக்குச் சார்பான தீர்மானங்களை எடுப்பதற்கு அரசாங்கம் தயங்காது என்பதைக் கூற விரும்புகின்றேன். தற்போதைய அரசாங்கத்தின் முதன்மையான நோக்கம் மக்களின் சுகாதார நிலை மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு என்பவற்றை மேம்படுத்துவதாகும்.

சகல சுகாதார ஊழியர்களும் அதைப் புரிந்துகொண்டு செயற்படுவார்கள் என்று சுகாதார அமைச்சும், அரசாங்கமும் நம்பிக்கை கொண்டுள்ளது. நாட்டில் சுகாதாரத்துறையில் சுமார் ஒன்றரை இலட்சம் சுகாதார ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களின் சேவைகள் நாட்டுக்கு அவசியமானவை. பல்வேறு சிரமங்களுடன் உள்நோயாளர் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு என மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு உயர்தரமான சேவையை வழங்குவது சுகாதார நிபுணர்களின் பொறுப்பு மற்றும் கடமை என்பதையும் நினைவு கூறவிரும்புகிறேன்.

நாட்டு மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஒவ்வொரு வரி ரூபாக்கும் மிக உயர்ந்த மதிப்பை வழங்கவேண்டும் என்பதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாகும். தேசிய திட்டத்தின்படி செயற்படுவதே தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு. எந்த சூழ்நிலையிலும் அரசியல்வாதிகளின் நற்பெயரை அதிகரிக்க விரும்பவில்லை. மாறாக மக்களுக்கு தொடர்ந்து சேவைகளை வழங்கவேண்டும் என்பதில் கவனமாக உள்ளோம்-என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 17.03.2025 | தினம் திங்கட்கிழமை | வெற்றி வாரம் 0486 |
| ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கம் 7 5 0 0 6 8 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 17.03.2025 | தினம் திங்கட்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2752 | ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கம் 13 30 70 71 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 17.03.2025 | தினம் திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கம் 13 20 28 42 | வெற்றி வாரம் 4913 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 17.03.2025 | தினம் திங்கட்கிழமை | |
| கும்பம் | வெற்றி இலக்கம் 25 30 48 62 | சீட்டிழுப்பு வாரம் 4464 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 17.03.2025 | தினம் திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து Y | சுப்பர் இலக்கம் 40 | வெற்றி இலக்கம் 35 42 45 55 | வெற்றி வாரம் 1928 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 17.03.2025 | தினம் திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கம் 31 62 66 75 | வெற்றி வாரம் 2578 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி 17.03.2025 | தினம் திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கம் 14 17 33 52 | வெற்றி வாரம் 2112 |

# மக்களின் பெயரை வைத்து அச்சுறுத்துகிறார் அமைச்சர்

## சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு விசனம்

கொழும்பு, மார்ச் 18

மக்கள் பக்கம் நின்று முடிவுகள் எடுக்கப்படும் என்று அச்சுறுத்தும் அமைச்சர் நளிந்த வரலாற்றை மறந்துவிட்டாலும், பல ஆட்சியாளர்கள் தொழிற்சங்கங்களை அடக்குவதற்காக மக்களின் பெயரைச் சேர்த்துச் செயற்பட்டனர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது என்று சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவு தொடர்பான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் திட்டமிட்டபடி நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

பட்டலந்த வதைமுகாமில் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களின் தலைகளைத் துண்டித்து, கண்களைப் பிடுங்கிய ஆட்சியாளர்கள் மக்கள் பக்கம் நின்றுகொண்டு அவ்வாறு செய்தோம் என்றே கூறினார்கள். நாங்கள் புதிதாக எதையும் கேட்கவில்லை. 40 ஆண்டுகளாக சுகாதார ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் சலுகைகளையே வழங்கவேண்டும் என்று கோருகின்றோம். 24 மணிநேர சுகாதார சேவைகளில் இவை அத்தியாவசியமானவை என்பதை அரசாங்கம் உணரவேண்டும். நளிந்த ஜயதிஸ்ஸ அரசியலை அப்புறப்படுத்தி பிரச்சினைக்கு தொழில்ரீதியாக தீர்வுகாணவேண்டும். அமைச்சர் ஜயதிஸ்ஸவின் கீழ் உள்ள அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் அதிகாரிகளால், தொழிற்சங்கங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சதித்திட்டங்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்படவேண்டும்-என்றார். (எ-இ)

# மீன்பிடிப் படகுகள் தீயில் எரிந்து சேதம்

மாத்தறை, மார்ச் 18

திக்வெல்ல நில்வெல்ல மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் நங்கூரமிட்டிருந்த இரு நெடுநாள் மீன்பிடிப் படகுகள் தீப்பிடித்து எரிந்துள்ளன.

இந்தச்சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை நடந்துள்ளது. தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று திக்வெல்லப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-25-இ)

# பஸ் விபத்தில் 21 பேர் காயம்

கொழும்பு, மார்ச் 18

புத்தளம், ஆராச்சிக்கட்டுப் பிரதேசத்தில் நேற்றுக்காலை நடந்த பஸ்விபத்தில் குழந்தை உட்பட 21 பேர் காயமடைந்துள்ளனர். கட்டுப்பாட்டை இழந்த இ.போ.ச. பஸ் வீதியை விட்டுவிலகி கடை மற்றும் மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. நிக்கவெரட்டியவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ்ஸே விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்தோர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று ஆராச்சிக்கட்டுப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)



# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 18

கேகாலை, பல்லேகமப் பிரதேசத்தில் வெளிநாட்டுத் துப்பாக்கி ஒன்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். புலத்கொஹுபிட்டியப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-இ)

# மலையிலிருந்து வீழ்ந்த இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 18

மஹவெலப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சலகமப் பிரதேசத்தில் ஹூலங்கல மலையிலிருந்து தவறி வீழ்ந்த இளைஞர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

உயிரிழந்தவர் கொழும்பு, தெமட்டகொடவைச் சேர்ந்த 22 வயதுடையவர் என்றும், நண்பர்களுடன் இவர் ஹூலங்கல மலையைப் பார்க்கச்சென்றபோது தவறிவீழ்ந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்புமனு நிராகரிப்பைத் தவிர்க்க அவதானத்துடன் செயற்படுங்கள்!

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

PAFFREL

கொழும்பு, மார்ச் 18

**உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும், சுயேச்சைக்குழுக்களும் தங்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படாதிருப்பதில் அவதானம் செலுத்தவேண்டும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று முதல் எதிர்வரும் 20ஆம் திகதிவரை இடம்பெறுகின்றது. வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவை தொடர்பில் மிகவும் அவதானம் செலுத்தி வேட்புமனுக்களைப் பூரணப்படுத்த வேண்டும். கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில்162 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அதேநேரம் பல வழக்குகளும் தொடுக்கப்பட்டிருந்தன. ஆகையால் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ள அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும் -என்றார். (எ-இ)

# இலங்கையருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்

இலங்கையர்களுக்கு ஜப்பான், இஸ்ரேல், தென்கொரியா போன்ற நாடுகளில் வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் கிஹான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இஸ்ரேலுக்கு 15 ஆயிரத்து 900 பேரும், ஜப்பானுக்கு 9 ஆயிரத்து 300 பேரும், கொரியாவுக்கு 7 ஆயிரத்து 600 பேரும் வேலைவாய்ப்புகளுக்காகச் செல்லவுள்ளனர். கட்டுமானப்பணிகள், விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு போன்ற துறைகளில் உள்ள வேலைவாய்ப்புகளுக்காகவே அவர்கள் அனுப்பப்படவுள்ளனர்-என்றார். (எ-6)

# எல்லை தாண்டிய மீன்பிடியை தடுப்பதற்கு கலந்துரையாடல்

கொழும்பு, மார்ச் 18

வடக்குக் கடலில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் தொடர்பாக இருநாட்டு அரசாங்கங்களும் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளன என்று மீன்பிடி அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரிநாயக்க தெரிவித்துள்ளார்.

இருநாட்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளன. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடப்படுகின்றது. ஆயினும் வடக்குக் கடலில் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்துவதே இந்தக் கலந்துரையாடலின் முதன்மையான நோக்கம் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-6)



# பத்தேகமவில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, மார்ச் 18

மிதிகம, பத்தேகம பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் அல்லது சந்தேக நபர்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் மிதிகமப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-25-இ)

# எரிபொருள்குழாய்க் கசிவு சில நாள்களில் சீராகும்

கொழும்பு, மார்ச் 18

கொழும்புத் துறைமுகத்தின் தெற்கு இறங்குதுறையில் இருந்து கொலன்னாவ களஞ்சியசாலைக்கு எரிபொருளை வழங்கும் நிலத்தடிக் குழாயில் ஏற்பட்ட கசிவைச் சரிசெய்ய இரு நாள்களுக்கும் அதிக காலம் எடுக்கும் என்று கனியவளக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஏ.ராஜகருணா தெரிவித்துள்ளார். கொலன்னாவ களஞ்சியசாலைக்கு எரிபொருளை விநியோகிக்கும் இரு நிலத்தடிக் குழாய்களில் ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு கசிவு ஏற்பட்டிருந்தது.

அதேவேளை, இந்தக் கசிவு காரணமாக 100 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய ஒருங்கிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஆனந்த பாலித்த தெரிவித்திருந்தார். (எ-இ)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 18

கடந்த வார இறுதியுடன் ஒப்பிடும்போது அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணயமாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 292.54 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 300.95 ரூபாவாகவும் காணப்பட்டது. (எ-இ)




**விட்டகுறை தொட்டகுறையா போடுப்பட்ட றோட்டுக் கதையும், மிச்ச றோட்டுப் போடுறதுக்கு ஆரம்ப விழாவ அமர்க்களமா வைக்க வெளிக்கிட்டு குழப்பமான கதையும் பட்சி நேற்றுச் சொன்னது உங்களுக்கு நினைவிருக்கலாம். உண்மையில என்ன நடந்ததெண்டு தெரியாமல்தான் அங்க நிண்ட சனமும் விழாவைச் சவையோட குழம்பியடிச்சது. ஆனால் உண்மையைச் சொல்லவேண்டியது பட்சியின்ர கடமையெல்லோ.**

**பொன்னாலையில இருந்து பருத்தித்துறை மட்டும் போற றோட்டில ॥ கிலோமீற்றர் தூரம் கடற்கரையோட ஒட்டிப் பிறந்த ரட்டைக்குழந்தைமாதிரி, பின்னிப் பிணைஞ்சுதான் அந்த றோட்டு இருக்கு. அதால அந்த ॥ கிலோமீற்றருக்கும் றோட்டுப் போடுற காசைப் போல இன்னொரு மடங்கு காசு இருந்தால்தான், அந்தக் கடற்கரையோட ஒட்டிக்கொண்டு போற றோட்டு நிண்டு பிடிக்க, பாதுகாப்புச் சுவர் கட்டலாம். அப்பிடி பாதுகாப்புச் சுவர் கட்டாட்டி, அலையடிச்சு அதையெல்லாம் அரிச்சுப் போடும். நாலைஞ்சு வருசத்தில றோட்டைக் கடலுக்கதான் தேடவேண்டி இருக்கும். இப்பிடி றோட்டுப் போடுற காசைவிட பாதுகாப்புச் சுவருக்கும் காசு கனக்கத் தேவை எண்டதாலதான் முந்தின அரசாங்கங்கள், இந்த றோட்டு வேலையை பொன்னாலையில இருந்து வல்வெட்டித்துறைச் சந்தியோட நிப்பாட்ட முடிவெடுத்திருக்கினம். அதால மிச்ச ॥ கிலோமீற்றர் றோட்டுக்கும் அவையள் காசும் முதல் ஒதுக்கேலை. ஆனால் ஒரு பக்கம் திருத்திப் போட்டு மற்றப்பக்கம் அப்பிடியே குண்டும் குழியுமா விட்டால், அந்த றோட்டைத் திருத்தியும் பிரியோசனமில்லையே. மிச்ச றோட்டையும் திருத்தச் சொல்லி சனமும் கிட்டடியில ஆர்ப்பாட்டம் செய்ய, றோட்டு விசயம் இந்தமுறை யாழ்ப்பாணம் வந்த அநுரவின்ர காதுக்கும் போயிருக்கு. இந்த றோட்டுப் பிரச்சினையைப் பார்த்து முடிக்கச்சொல்லி, அவர் இதுக்குப் பொறுப்பான அமைச்சரான பிமல் ரத்நாயக்கவுக்குச் சொல்லியிருக்கிறாராம்.**

**'இந்தமுறை எங்களை நம்பி வாக்குப் போட்ட சனத்துக்கு ஏதாவது செய்யவேணும்' எண்டு நினைச்சுக் கொண்டிருந்த திசைகாட்டிக்காரருக்கு, இந்த றோட்டு விசயம் அம்பிட்டால் சும்மாவிடுவினமோ? பட்ஜெட்டில யாழ்ப்பாணத்துக்கு ஒதுக்கினதைவிட, தன்ர அமைச்சின்ர நிதியில மிச்ச ॥ கிலோமீற்றர் றோட்டைப் போட பிமல் ரத்நாயக்க ஓர்டர் போட்டிருக்கிறார். அந்த ॥ கிலோமீற்றர் றோட்டுக்கு 1500 மில்லியன் ரூபாவும், பாதுகாப்புச் சுவர் கட்ட 1500 மில்லியன் ரூபாவும் தேவையாம். மொத்தமா 3000 மில்லியன் ரூபாவை யாழ்ப்பாணத்துக்கு அள்ளிக்குடுத்திட்டு, அதை சனத்துக்குச் சொல்லி, றோட்டை அகலப்படுத்த ஒத்துழையுங்கோ எண்டு கேக்கத்தான் அண்டைக்கு மீட்டிங்க் வைக்க வெளிக்கிட்டவையாம். ஆனால் அதை சரியாச் சனத்திட்ட சொல்லாததால, 'போட்ட றோட்டுக்கு எதுக்கு ஆரம்பவிழா' எண்டு வந்தவையோட சனமும் வாய்க்குவாய் காட்டியிருக்கினம். சும்மா மணித்தியாலக் கணக்கில மைக்கை விழுங்கின பாம்பு மாதிரி ஏதேதோ எல்லாம் சொல்றதைவிட 'இந்த றோட்டை ரண்டு கட்டமாச் செய்யோணும். இரண்டாம் கட்டத்துக்கு 3000 மில்லியனை நெடுஞ்சாலைகள், போக்குவரத்து அமைச்சு ஒதுக்கியிருக்கு. அதால வீட்டுக்குப் பக்கத்தில இருக்கிறவை இந்தத் திட்டத்துக்கு ஒத்துழைக்கவேணும்' எண்டு அமைச்சர் சொல்லியிருந்தால் சோலியிண்டு வந்திருக்காதே. சனங்களுக்கும் இந்த அரசாங்கம் தங்களில அக்கறையா இருக்கெண்ட நினைப்பு வருமெல்லோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)





**மேடம்:** தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குத் தாயின் தேவைகளை நிறைவேற்றி, அவருடைய ஆசிகளைப் பெறும் வாய்ப்பு உண்டாகும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.



**இடபம்:** அரசு தொடர்பான காரியங்களில் வெற்றி கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். தாயின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்ச்சி அடைவீர்கள்.



**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.



**கடகம்:** சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம்தேவை. மாலையில் நண்பர்களுடன் வெளியிடங்களுக்குச் சென்றுவருவீர்கள்.



**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



**கன்னி:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்துசேரும். சிலருக்கு கோயில்களுக்குச் சென்று வேண்டுதல்களை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.



**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.



**விருச்சிகம் :** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுக்காக செலவுசெய்ய நேரிடும்.



**தனுசு:** தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு சிறு தடைகள் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.



**மகரம்:** இன்றைக்கு உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுவருவார்கள்.



**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.



**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். சிலருக்கு ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2025 – 2027



## இடபம்

'வாக்கே வாழ்வு' என்ற கூற்றுப்படி எடுத்த காரியத்தையும், கொடுத்த வாக்கையும் காப்பாற்றும் ரிஷப ராசி அன்பர்களே! பணப்புழக்கம் தங்களிடம் தட்டுப்பாடின்றி இருக்கும். உங்களது உழைப்பால் மற்றவர்களை வாழவைப்பீர்கள். யார் உங்களிடம் வாக்குக் கொடுத்தாலும் அதன்படி அவர்கள் நடந்துகொள்ளாவிட்டால் உங்களுக்குக் கோபம்வரும். ஏனென்றால் நீங்கள் தன்மானம் நிறைந்தவர்கள். எந்தச் சூழ்நிலையிலும் அடுத்தவர் மனம் புண்படாதபடி பேசுவதில் வல்லவர் நீங்கள். இந்தச் சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப்போகிறது என்பதைப் பார்ப்போம்.

இந்தச் சனிப்பெயர்ச்சியில் தேக ஆரோக்கியத்தில் கவனம்செலுத்தவேண்டிய சூழ்நிலை உருவாகும். இதனால் உங்களின் செயல்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க இயலாமலும் போகும்.



அதேநேரம் பல சாதகமான நிலைமைகளும் வர இருக்கின்றன. உங்களின் வெளியூர் மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகளை வலுப்படுத்துவீர்கள். செலவுகள் அதிகரிக்கும் என்பதால் அவற்றை ஈடுகட்ட பழைய கடன்களை வசூலிப்பீர்கள். நீங்கள் விரும்பிய வீட்டிற்குக் குடிபெயர்வீர்கள். சுகபோக வசதிகளை அனுபவிப்பீர்கள். உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும்.

உடல் உழைப்புக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். அனைத்துச் செயல்களையும் பொறுமையுடனும், நிதானத்துடனும் செய்யவேண்டும். உங்களின் ஆலோசனைகள் உங்களுக்குப் பயன்படுவதை விட மற்றவருக்குப் பயன்படும். நீரிழிவு நோய் மற்றும் கல்லீரல் நோய் போன்றவை உள்ளவர்கள் கூடுதல் கவனத்தோடு இருக்கவும்.

புதிய முயற்சிகளில் இறங்கி அனுபவம் பெறுவீர்கள். உங்களின் முக்கிய திட்டங்கள் நிறைவேறும். தொழிலில் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கி முன்னேற்றகரமான திருப்பங்கள் உண்டாகும். கடன்களைத் திருப்பி அடைத்து புதிய சேமிப்புகளிலும் ஈடுபடுவீர்கள். நேர்முக மறைமுக எதிர்ப்புகள் மறையும். அலுவலகத்தில் அனுகூலமான சூழலைக் காண்பீர்கள். பணவரவில் சிறு தடைகள் ஏற்பட்டாலும் உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் எந்தக் குறையும் ஏற்படாது.

வியாபாரிகளின் திட்டங்கள் அனைத்தும் நல்ல இலாபத்தைக் கொடுக்கும். கொடுக்கல், வாங்கலில் சிறப்புகள் உண்டாகும்.

கலைத்துறையினர் கடினமாக உழைத்தால் துறையில் வெற்றிவாகை சூடலாம். மற்றபடி உங்கள் வேலைகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்துவிடுவீர்கள். உங்கள் திறமைகளை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். மாணவர்கள் கடினமாக உழைத்துப் படிப்பதன் மூலம் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். சிலருக்கு வெளியூர் சென்று கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைக்கும்.

# திருவாசகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 18

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நடத்தப்படும் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. சைவப்புலவர் க. கைலநாதன் "மாணிக்கவாசகரும் திருப்படையாட்சியும்" எனும் விடயப் பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

# நிர்வாகத் தெரிவு

நாவற்குளி, மார்ச் 18

நாவற்குளி கோவிலாக்கண்டிச் செல்வா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் சனசமூக நிலைய மண்டபத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறும் என நிலையத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (எ-25-9)

# விபத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

முகமாலை, இந்திராபுரத்தில் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் நடந்த விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர். ஹையேஸ் வாகனம் ஒன்று இரு மோட்டார் சைக்கிள்களுடன் மோதியதில் விபத்து நடந்துள்ளது. (எ-25,27)

# கந்தபுராணபடனத் தொடர் சுக்கிரவாரச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 18

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடர்-17 சொற்பொழிவு, ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சைவப்புலவர் செ.த.குமரன் "அயனைச் சிறை நீக்கு படலம்" எனும்விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# வரலாற்று வாய்ப்பு!

கனடாவின் நீதியமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கின்றார் ஈழத்தமிழ்ப் பின்னணியைக் கொண்டவரான ஹரி ஆனந்தசங்கரி. கனடாவில் இதுவரை பிரதமராக இருந்த ட்ரூடோவின் அமைச்சரவையில் பூர்வகுடிகளுக்கான அமைச்சராக இருந்த அவர், தற்போதைய பிரதமர் கார்னியின் அமைச்சரவையில் நீதியமைச்சராக நியமிக்கப்பட்டமையானது ஈழத்தமிழர்களுக்கான நீதி தேடும் நெடும்பயணத்தில் ஓர் உன்னத வாய்ப்பு என்றும் கொள்ளலாம்.

'இறுதிப்போரின்போது இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெற்றன. இலங்கை அரசாங்கம் திட்டமிட்ட வகையில் தமிழர்களைக் கொன்று குவித்தது' என்று தனது நாடாளுமன்றத்தில் தனது தீர்மானத்தை நிறைவேற்றிய உலகின் முதலாவது நாடாக கனடா அறியப்படுகின்றது. பிரதமர் ட்ரூடோவின் தலைமையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், இதற்கெல்லாம் பிரதான காரணகர்த்தாவாகவும் மூளையாகவும், அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியே செயற்பட்டிருந்தார். ஆக, பூர்வகுடிகளுக்கான அமைச்சராக செயற்பட்டபோதே, இப்பேர்ப்பட்ட பெரியதொரு நடவடிக்கையை எடுத்திருந்த ஹரியின் கைகளில்தான் தற்போது கனடாவின் ஒட்டுமொத்த நீதித்துறையும் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

நிச்சயமாக தனக்குத் தற்போது வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தையும், தனக்குரிய வாய்ப்புகளையும் நீதி அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி முழுமையாகப் பயன்படுத்துவார் என்று நம்பலாம். அதற்காக அவரின் கரங்களைப் பலப்படுத்த வேண்டிய கட்டாயத்தனம் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இருக்கவே செய்கின்றது. எமது அரசியற் கட்சிகள் அமைச்சர் ஹரியுடன் நெருக்கமாகச் செயற்படவேண்டிய காலம்தான் இது. இந்த வரலாற்று வாய்ப்பை நாங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எல்லாவற்றையும்விட, உலகின் உச்ச அபிவிருத்தியையும், அதிகாரங்களையும் கொண்ட நாடுகளின் கூட்டணியான ஜி'7 நாடுகளின் தலைமைத்துவம் கனடாவிடம் தற்போது கையளிக்கப்பட்டிருக்கின்றது. இந்த வருடம் முழுவதும் அந்தப் பதவி கனடாவிடம்தான் இருக்கும். ஜி'7 நாடுகளின் கொள்கைகளிலும், கோட்பாடுகளிலும் வெளிவிவகார அமைச்சுகளும், நீதியமைச்சும், வர்த்தக அமைச்சுகளுமே அதிக செல்வாக்குச்செலுத்தும். ஆதலால், ஈழத் தமிழர்களின் இனப்படுகொலைக்கான நீதிதேடும் நடவடிக்கையை கனேடிய நீதியமைச்சர் ஹரியால் மிக இலகுவாக அடுத்த கட்டத்துக்கு நகர்த்த முடியும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்குப் பிரதான அனுசரணையை வழங்கிய அமெரிக்கா அதிலிருந்து விலகியும் வெளியேறியும் விட்டுள்ள நிலையில், மாற்றுத்தலைமைகளைத் தேட வேண்டிய கட்டாயத்தனம் எமக்கிருக்கின்றது. அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு என்னென்ன வாய்ப்புகள் எல்லாம் உள்ளனவோ அவை அனைத்தையும் நாம் பரிசீலிக்கவேண்டும். அதற்கான பயணத்தில் ஹரி ஆனந்தசங்கரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கனேடிய நீதித்துறையும் மிகப் பிரதானமானது.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




**நாளொரு நல்வார்த்தை**

அறியாமை என்பது கடவுளின் சாபம், அறிவு என்பது நாம் சொர்க்கத்திற்குப் பறப்பதற்கான சிறகு.

—வில்லியம் ஷேக்ஸ்பியர்—



## தென்னக்கோனின் 'ரிட்' மனு தள்ளுபடி



கொழும்பு, மார்ச் 18

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் பிறப்பிக்கப் பட்டுள்ள பிடியாணைக்கு இடைக்காலத் தடைஉத்தரவு வழங்கக் கோரி முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணை இன்றித் தள்ளுபடி செய்துள்ளது.

தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ள பிடியாணையைச் சட்டத்தின்படி செயற்படுத்தவேண்டும் என்று பொலிஸாருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (எ-இ)

## கொழும்பில் போர்க்கப்பல்

கொழும்பு, மார்ச் 18

பிரான்ஸ் நாட்டின் கடற்படைப் போர்க்கப்பலான பிரொவென்ஸ் உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளது.

142.20 மீற்றர் நீளமும், 160 நிர்வாகக் குழுவினரையும் கொண்ட இந்தப் போர்க்கப்பலின் கட்டளை அதிகாரியாக கப்டன் லியோனல் செக்பெரிட் செயற்படுகின்றார்.

இக்கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் அதன் நிர்வாகக்குழுவினர்கள் கொழும்பிலுள்ள முக்கிய இடங்களைப் பார்வையிடுவர் என்றும், பயணத்தை முடித்துக்கொண்டு கப்பல் நாளைமறுதினம் 20ஆம் திகதி நாட்டில் இருந்து புறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## நிலுவைத் தொகையுடன் முதியோர் கொடுப்பனவு

கொழும்பு, மார்ச் 18

குறைந்த வருமானம் கொண்ட 70 வயதுக்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும் 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவை, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் காணப்படும் நிலுவைத் தொகையுடன் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று தேசிய முதியோர் செயலகத்தின் பணிப்பாளர் சந்துர மிஹிதும் தெரிவித்துள்ளார்.

இதுவரை உதவித்தொகை பெறாத குடும்பங்களில் உள்ள முதியவர்கள் மட்டும் தபால் அலுவலகம் மற்றும் உபதபால் நிலையங்களில் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளமுடியும். அஸ்வெசும பெறும் முதியோர்களுக்கு இந்தக் கொடுப்பனவு நலன்புரிச் சபை ஊடாக அல்லது நேரடியாக அஸ்வெசும வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கைவிடப்பட்டது பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, மார்ச் 18

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்கம் கைவிட்டுள்ளது.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## மாணவருக்கு இடையூறு ஏற்பட்டால் நடவடிக்கை

வேட்புமனுத்தாக்கல் செய்யும் வேட்பாளர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் செயற்படவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

வேட்பாளர்கள் உட்பட எவரேனும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையான முறையில் நடைமுறைப்படுத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (எ-இ)

**நாளை**

புதன்கிழமை -பங்குனி - 05

19.03.2025

சுபநேரம் : 10.49 - 12.19

ராகுகாலம் : 03.19 - 04.49


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.03.2025 செவ்வாய்க்கிழமை

# இலங்கையில் முதலிடவுள்ள ஐரோப்பிய ஆதரவு நிதியம்!

கொழும்பு, மார்ச் 18

ஐரோப்பிய நாடுகளால் ஆதரிக்கப்படும் உட்கட்டமைப்பு நிதியமொன்று இலங்கை உட்பட சில நாடுகளில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் 300 மில்லியன் டொலரை முதலீடு செய்யவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ப்ளூம்பெர்க் வெளியிட்டுள்ள செய்தியில், இலங்கை, கம்போடியா, லாவோஸ் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் உள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்கு வளர்ந்துவரும் ஆபிரிக்க மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு நிதியம் திட்டமிட்டுள்ளது. இந்த நிதியம் எதிர்வரும் 4 ஆண்டுகளில் ஆசிய மற்றும் ஆபிரிக்கா முழுவதும் மொத்தமாக ஒரு பில்லியன் டொலரைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது என்று அந்த நிதியத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். உலக வங்கி பிரிட்டன், ஜேர்மனி மற்றும் சுவிட்ஸர்லாந்து உட்பட 7 நன்கொடையாளர்களால் இந்த நிதியத்துக்கு நிதியளிக்கப்படுகின்றது. (எ-இ)



## பங்குனித்திங்கள் பொங்கல் நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 18

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவிலின் பங்குனித் திங்கள் உற்சவத்தின் முதலாவது பொங்கல் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. அடியவர்கள் பலரும் வழிபாடுகளில் கலந்து கொண்டு தமது நேர்த்திக்கடன்களைச் செலுத்தினர். (எ-25,9)

## கடற்றொழில் சமூகத்தை கருவறுக்கிறது அநுர அரசு

அன்னலிங்கம் அன்னராசா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 18

தற்போதைய அநுர அரசாங்கம் வடக்குக் கடற்றொழில் சமூகத்தை கருவறுக்கும் செயற்பாட்டையே முன்னெடுக்கின்றது என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அநுர அரசாங்கம் ஆட்சிக்கு வரமுன்னர் நாட்டை ஊழல் அற்றதாக மாற்றுவோம் என்று கூறியது. ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் தங்கள் நிலைப்பாட்டை மாற்றியுள்ளது.

வடக்கில் பாரம்பரிய சிறு கடற்றொழிலாளர்கள் பல பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். முறையற்ற வகையில் தகவல்களை வழங்கி மீனவர்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன.

கடலட்டைப் பண்ணைகளை முறையாக விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் நடத்தி வழங்கவேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம். ஆனால் பண்ணைகளுக்கான இடங்கள் அதிகாரிகளினதும், அரசியல்வாதிகளினதும் விருப்புக்கேற்ப வழங்கப்படுகின்றன. கடற்காணிகளை வழங்கும் அதிகாரத்தை வடக்கு ஆளுநருக்குக் கொடுத்தது யார்? தொடர்ந்து சட்டவிரோதமாகப் பண்ணைகளுக்குக் காணிகள் வழங்குவதை நிறுத்தாவிட்டால் நாம் தொழில் நடவடிக்கையைக் கைவிடும் நிலைமை ஏற்படும்-என்றார். (எ-25,20)

## கிராம அலுவலர் மீது தாக்குதல் கண்டித்து நேற்றுப் போராட்டம்

கிளிநொச்சி, மார்ச் 18

கரைச்சிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பெண் கிராம அலுவலர் ஒருவர் தாக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து கிராம அலுவலர்கள் நேற்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெண் கிராம அலுவலர் உலக மகளிர் தினமான கடந்த 8ஆம் திகதி அவரது அலுவலகத்தில் கடமை நேரத்தில் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கு நீதிகோரியும், கிராம உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று கிராம அலுவலர்கள் தெரிவித்தனர். (எ-113)

## பங்குனி உற்சவத்தையொட்டி மரக்கறிகளின் விலை உயர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். குடாநாட்டில் மரக்கறிகளின் விலை நேற்று திங்கட்கிழமை முதல் அதிகரித்துள்ளது என்று நுகர்வோர் குறிப்பிடுகின்றனர்.

பங்குனித்திங்கள் உற்சவம் மற்றும் ஏனைய சுப வைபவங்களை முன்னிட்டு மரக்கறிகளின் பாவனை அதிகரித்துள்ளதால், அவற்றின் விலையும் அதிகரிகரித்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர். திருநெல்வேலிச் சந்தை நிலவரப்படி கத்தரிக்காய் கிலோ 200 ரூபா, பயிற்றங்காய் 400 ரூபா , பாகற்காய் 500 ரூபா, வெண்டிக்காய் 300 ரூபா, பூசணி 150 ரூபா, மிளகாய் 800 ரூபா, தக்காளி 300 ரூபா, கீரை ஒரு பிடி 150 ரூபா, சரு 800 ரூபா ஆகிய விலைகளில் விற்கப்பட்டன. (எ-25,17)



## புத்தகப்பைகள் கையளிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 18

வடமராட்சி கிழக்கு சமூகமாற்றத்துக்கான ஊடக மையத்தின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு மாமடுச் சந்தி பழம்பாசி கற்பகா அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கப்பட்டுள்ளன. நெடுங்கேணி பழம்பாசி கற்பகா அறநெறி பாடசாலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் சமூகமாற்றத்துக்கான ஊடக மைய உறுப்பினர்களான இ. முரளிதரன், சி.த. காண்டீபன், ம. திலெக்ஸ், சமூக மற்றும் பெண்ணியல் செயற்பாட்டாளர் திருமதி சந்திரமதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜேர்மனியில் வசிக்கும், லஷ்மிகா அறக்கட்டளையின் நிறுவுனர் தர்மிகாவின் நிதிப்பங்களிப்பில் 70 மாணவர்களுக்குப் புத்தகப்பைகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-25)

## நெல்லியடி மு.கூ.சங்கத்துக்கு புதிய நிர்வாகம்

கொழும்பு, மார்ச் 18

நெல்லியடி முச்சக்கரவண்டி கூட்டுறவுச்சங்கத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு நேற்றுமுன்தினம் கரவெட்டிப் பிரதேசசபையின் மண்டபத்தில் கரவெட்டிப் பிரதேசசபையின் செயலாளர் க. கம்சநாதன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டுறவுச்சங்க உத்தியோகத்தர்களான அ. தயாளன், சி. சிரீதரன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் நெல்லியடி நகரப்பகுதி முச்சக்கரவண்டிகளின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

இராசன் விஜிதரன் சங்கத்தின் புதிய தலைவராகவும், சிவபாலசிங்கம் ஆர்த்திகன் செயலாளராகவும், சிவராசா புஸ்பராசா பொருளாளராகவும், மாயவன் மகேஸ்வரன் உப தலைவராகவும், இந்திரன் நிரோஜன் உப செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். புதிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-66)



ஓவியர் மாற்குவினுடைய சிறந்த ஓவியங்களின் காட்சிப்படுத்தல் மன்னாரில் மார்ச் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை நடைபெற்றது. பல்வேறு தரப்பினரும் ஓவியங்களைப் பார்வையிட்டனர். (எ-25)

## பளை மத்திய பஸ்நிலையத்தில் பயணிகளுக்கு அசௌகரியம்

கிளிநொச்சி, மார்ச் 18

பளை மத்திய பஸ்நிலையத்துக்குள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கரவண்டிகள் நிறுத்தப்படுவதால் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது என்று பயணிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். வேலைநிமித்தம் செல்வோர் தமது வாகனங்களை பஸ்தரிப்பிடத்துக்குள் நிறுத்திச்செல்கின்றனர். அத்துடன் பாடசாலை முடிவடையும் நேரத்தில் சிலர் பளை பஸ்தரிப்பிடத்தில் இருந்துகொண்டு மாணவர்கள் மற்றும் பயணிகளிடம் அநாவசியமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-25,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.வின் வெளியக பொறிமுறைக்கு வலுச்சேர்க்கவே பட்டலந்த அறிக்கை

## பொதுஜன பெரமுன கூறுகின்றது



கொழும்பு, மார்ச் 18

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் சம்பந்தமாக வெளியக விசாரணைப் பொறிமுறைக்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவில் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்காப் பொதுஜன பெரமுனக் கட்சி தெரிவித்துள்ளது.

மொட்டுக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- தமிழ் பிரிவினைவாத டயஸ்போராக்கள் சூழ்ச்சியாகவே பல வருடங்களுக்குப் பிறகு தற்போது அறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி.யின் தலைவர் ரோஹண விஜேவீர கொல்லப்பட்டமை தொடர்பில் நேரடி சாட்சியம் உள்ளது என்று நபரொருவர் கூறியுள்ளார். சந்திரிகா ஆட்சியில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முக்கிய அமைச்சராக இருந்தார். அப்போது பட்டலந்த அறிக்கை தொடர்பில் ஏன் பேசப்படவில்லை, அறிக்கை வெளியிடப்படவில்லை? மைத்திரிபால சிறிசேன ஆட்சிகாலத்திலும் ஊழல் ஒழிப்புப் பிரிவில் அநுர முக்கிய வகிபாகத்தை வகித்தார். அப்போது ஏன் மேற்படி அறிக்கை எடுக்கப்படவில்லை? அல் ஜெஸீரா ஊடக நேர்காணலில் புலிகளுக்குச் சார்பான பார்வையாளர்கள் சபையே இருந்தது. ரணிலை அழைத்து, பட்டலந்த அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்தி தற்போது அதனை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சாட்சிகள் திரட்டப்பட்டுவருகின்றன. போருக்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கிய தலைவர்கள் மற்றும் படையினரை இலக்குவைத்தே இந்தப் பொறிமுறை வகுக்கப்படுகின்றது. இந்தப் பின்புலத்தில் பட்டலந்த அறிக்கையை வெளியிட்டு, இலங்கை மனித உரிமைகளை மீறிய நாடென்பதைக் காண்பிப்பதற்கு களம் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. இது காட்டிக்கொடுப்பாகும். இலங்கை தொடர்பில் வெளியக பொறிமுறைக்கு முயற்சிக்கப்படும் முக்கிய வேளையில் அறிக்கை வெளியிடப்படுவது சூழ்ச்சியாகும். இதைக் கண்டிக்கின்றோம்- என்றார்.

# '89' கலவரம் தொடர்பாகவும் அரசு கவனம் செலுத்தவேண்டும்!

## வலியுறுத்துகின்றார் சாமர சம்பந்த எம்.பி.

கொழும்பு, மார்ச் 18

விஜயகுமாரதுங்க படுகொலை உள்ளிட்ட முக்கிய படுகொலைகள் தொடர்பான விசாரணை அறிக்கைகளை எதிர்வரும் காலங்களில் நாங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். பட்டலந்த விவகாரத்தில் அரசாங்கம் கவனம்செலுத்துவதைப் போன்று 88 மற்றும் 89 காலப்பகுதியில் இடம்பெற்ற கலவரம் குறித்தும் கவனம்செலுத்த வேண்டும். இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. கடந்த காலங்களில் பேசப்பட்ட பிரதான விடயங்கள் இனி மறக்கப்படும். இதனால் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா? அரசாங்கம் 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற கலவரம் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரத்தை மக்கள் விடுதலை முன்னணியே கட்டவிழ்த்துவிட்டது. தமிழர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டார்கள். இவர்கள் இன்று இனநல்லிணக்கம் பற்றிப் பேசுகிறார்கள் -என்றார். (எ-இ)

# ஜே.வி.பி.யால் கொல்லப்பட்டோரின் விவரமும் பட்டலந்த அறிக்கையில்!

## ஐ.தே.க. தவிசாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 18

ஐக்கிய தேசியக் கட்சியின் சுமார் ஆயிரத்து 960 உறுப்பினர்கள் ஜே.வி.பியால் கொல்லப்பட்டனர் என்று பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையின் மூன்றாவது அத்தியாயத்தில் உள்ளது என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன, ஜே.வி.பி. அரசாங்கச் சொத்துகளுக்கு ஏற்படுத்திய சேதம் அச்சத்தை ஏற்படுத்தும் அளவுக்குப் பெரியது என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாட்டின் பாதுகாப்பு நிலைமை படிப்படியாகவும் தொடர்ச்சியாகவும் மோசமடைந்து, அரசியல்வாதிகளின் உயிருக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியது என்று ஆணைக்குழு அறிக்கை கூறுகிறது. உயர்மட்ட அரசியல்வாதிகளைத் தவிர, பொது மக்களிடையே அரசியல் அனுதாபிகளும் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகினர் என்று ஆணைக்குழு அறிக்கை கூறுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் சுமார் ஆயிரத்து 960 உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்று ஆணைக்குழு மதிப்பிடுகின்றது. மூத்த பொலிஸ் அதிகாரிகளும் தங்கள் தாக்குதல்களில் குறிவைக்கப்பட்டனர் என்றும், அந்த நேரத்தில் ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் தொடர்பாக புலனாய்வுத் தகவல்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கண்காணிப்பாளர் கிளாரன்ஸ் பெரேரா, ஜே.வி.பி.யினரால் கொல்லப்பட்டார் என்றும் ஆணைக்குழு கூறுகின்றது - என்றார். (எ-இ)

# கிளிநொச்சியில் தமிழரசுக் கட்சி

## வேட்மனுத் தாக்கல்

கிளிநொச்சி, மார்ச் 18

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரு பிரதேசசபைகளுக்கான வேட்பு மனுவை இலங்கைத் தமிழரசுக் கட்சி தாக்கல்செய்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவருமான சிவஞானம் சிறீதரன் தலைமையில் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, முன்னாள் தவிசாளர்களான அருணாசலம் வேழமாலிகிதன், சுப்பிரமணியம் சுரேன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை உறுப்பினர்களின் பங்கேற்போடு, இரு சபைகளுக்குமான வேட்புமனுக்கள் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் நேற்றுத் தாக்கல்செய்யப்பட்டன. (எ-125)

# ம.போ.முன்னணி வவுனியாவில் கட்டுப்பணம்

வவுனியா, மார்ச் 18

வவுனியா மாநகரசபை உட்பட மூன்று சபைகளிலும் போட்டியிடுவதற்கு மக்கள் போராட்ட முன்னணி நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தியது. வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்குத் தமிழ் பிரதேசசபை, சிங்கள பிரதேசசபை ஆகியவற்றில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை அந்த அமைப்பின் வன்னி மாவட்ட முக்கியஸ்தர்கள் என்.பிரதீபன் மற்றும் காமினி உள்ளிட்டவர்கள் மாவட்டத்தெரிவத்தாட்சி அலுவலகத்தில் செலுத்தினர். (எ-110)

# ஐ.ம.ச., தே.ம.ச. கிளிநொச்சியில் கட்டுப்பணம்

கிளிநொச்சி, மார்ச் 18

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பன நேற்றுக் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூன்று உள்ளூராட்சிசபைகளுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தின. ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக மாவட்ட அமைப்பாளர் மரியசீலனும், தேசிய மக்கள் சக்தி சார்பாக மாவட்ட அமைப்பாளர் ம.மோகனும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தினர். (எ-113)

# கொழும்பு மாநகரசபையில் இம்முறையும் பச்சைக்கொடி

கொழும்பு மாநகரசபையில் இம்முறையும் பச்சைக்கொடி பறக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது. கொழும்பு மாநகரசபை உட்பட கொழும்பு மாவட்டத்தில் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய கட்டுப்பணத்தை ஐக்கிய தேசியக்கட்சி நேற்றுச்செலுத்தியது. கொழும்பு மாநகரசபையை இம்முறையும் ஐக்கிய தேசியக்கட்சி கைப்பற்றும். மேயர் வேட்பாளர் விரைவில் அறிவிக்கப்படுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (எ-44)

# பொல்துவ சந்தியில் போராட்டங்கள் நடத்தத்தடை

கொழும்பு, மார்ச் 18

பத்தரமுல்லயில் உள்ள பொல்துவ சந்தியில் நேற்றுமுதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை போராட்டங்களை நடத்துவதற்குக் கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அந்தப் பகுதியில் ஏற்பாடுசெய்யப்பட்ட போராட்டங்கள் மற்றும் அடையாள வேலைநிறுத்தங்கள் தொடர்பாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இறைமையை விட்டுக்கொடுக்க மாட்டோம்!

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 18

**இலங்கையின் இறையாண்மையை யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக்கொடுக்கமாட்டோம் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.**

ஸ்ரீலங்கா நாடாளுமன்ற அமர்வுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. அந்த அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-அமைதியான முறையில் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை வழிப்படுத்தும் முறைமையை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம். இலங்கை தற்போது அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு நல்லிணக்கத்தை நோக்கிச் செல்வதற்குரிய புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளது என்பதை உலக நாடுகள் ஏற்றுள்ளன. வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீட்பதற்குரிய வேலைத்திட்டமும் முன்னெடுக்கப் பட்டுவருகின்றது. எமது நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மை என்பவற்றைப் பாதுகாத்தப்படியே வெளிநாடுகளுடன் கொடுக்கல், வாங்கலில் ஈடுபடுகின்றோம். ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான், மத்திய கிழக்கு நாடுகள் என்பவற்றுடன் சிறந்த உறவு உள்ளது - என்றார். (ம-44)


### பெறுகை அறிவித்தல்
### வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
### சபை நிதி 2024/2025 மற்றும் முத்திரைத்தீர்வை 2023

1. வலிகாமம் மேற்கு பிரதேசசபை சபை நிதி மற்றும் முத்திரைத்தீர்வை நிதி என்பவற்றைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. தலைவர், பிரதேச மட்ட பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில், நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம், அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 18.03.2025ம் திகதியிலிருந்து 01.04.2025 ம் திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000 (வரிநீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 02.04.2025 ம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
8. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து கேள்விசெல்லுபடியாகும் காலம். | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | சுழிபுரம் பகுதி வீதிகள் புனரமைப்பு (மூளாய் 2ம் ஒழுங்கை -மிகுதி வேலை (மாவடி மூளாய் வீதி 5ம் ஒழுங்கை), இறாத்தலடி வீதி 1ம் ஒழுங்கை, பொன்னாலை வீதி 1ம் ஒழுங்கை - மிகுதி வேலை) NP/14/41(17)/02/CF/01/2025 | 5.996 Mn. | 60 நாட்கள் | C8 & Above வீதிப் புனரமைப்பு | 77 நாட்கள் | 18.06.2025 | 60,000.00 | 16.07.2005 |
| 02 | சங்கானை பகுதி வீதி திருத்தம் (ஆஸ்பத்திரி தெற்கு வீதி ) NP/14/41(17)/02/CF/02/2025 | 2.581 Mn. | 45 நாட்கள் | C9 & Above வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 21.05.2025 | 26,000.00 | 18.06.2025 |
| 03 | வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் திருத்தம் (சித்தங்கேணி பிள்ளையார் கோவில் வீதி 4ம் ஒழுங்கை, கார்த்திகேசு வித்தியாலய வீதி 1ம் ஒழுங்கை, கிராவோலை வீதி, கண்ணகை அம்மன் கோவில் வீதி 1ம்ஒழுங்கை) NP/14/41(17)/02/CF/03/2025 | 5.236 Mn. | 60 நாட்கள் | C8 & Above வீதிப் புனரமைப்பு | 77 நாட்கள் | 18.06.2025 | 55,000.00 | 16.07.2025 |
| 04 | அராலி பகுதி வீதிகள் திருத்தம் (நொச்சிக்காடு வீதி, களவத்துறை விளையாட்டுக்கழக வீதி) NP/14/41(17)/02/CF/04/2025 | 7.928 Mn. | 60 நாட்கள் | C8 & Above வீதிப் புனரமைப்பு | 77 நாட்கள் | 18.06.2025 | 80,000.00 | 16.07.2025 |
| 05 | தலைமை அலுவலகத்திற்கான முகப்பு அலுவலகம் அமைத்தல். NP/14/41(17)/02/CF/05/2025 | 15.00 Mn | 84 நாட்கள் | C7& Above கட்டட நிர்மாணம் | 77 நாட்கள் | 18.06.2025 | 150,000.00 | 16.07.2025 |
| 06 | தேவாலய வீதி, சுழிபுரம் திருத்தம்- (மிகுதி வேலை) NP/14/41(17)/02/SD/01/2025 | 1.069 Mn. | 45 நாட்கள் | C9 & Above வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 21.05.2025 | 11,000.00 | 18.06.2025 |

கேள்விதிறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 21.03.2025 அன்று மு.ப.10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தசெலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
பிரதேச மட்ட பெறுகைக் குழு,
வலிகாமம் மேற்குபிரதேச சபை,
சுழிபுரம்.

18.03.2025.

CR/44596) J-1




## விளையாட்டு நிகழ்வு

வேலணைத் தெற்கு ஐயனார் முன்பள்ளி மற்றும் கண்ணன் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு நிகழ்வு ஐயனார் முன்பள்ளித் தலைவர் வடிவேல் கிருஷாந் தலைமையில் வேலணைத் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி திருமதி மாதுரி நிரோசன், சிறப்பு விருந்தினர்களாக ஆறுமுகம் செல்வராசா, பரமசாமி தம்பித்துரை, கௌரவ விருந்தினர்களாக பிரதேச சமூக அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவ...

நேற்று பலவந்தமாகத் திணித்துள்ளனர். வன்முறைக் குழுக்களில் உள்ளவர்களைப் போன்ற தோற்றத்தில் இருந்த அவர்கள், மாணவிகளுக்கு நெருக்கமாகவும், அவர்களின் கைகளைப் பிடித்து இழுப்பதுபோன்றும் நடந்துகொண்டமை அங்கிருந்தவர்களை முகம் சுழிக்க வைத்துள்ளது. இந்த அத்துமீறலில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் பிரதேச செயலகங்களுக்கு பெற்றோராலும், சமூக நலன்விரும்பிகளாலும் முறைப்பாடுகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, சம்பவம் இடம்பெற்ற பகுதிகளுக்கு, பிரதேச செயலகங்களின் உரிய அதிகாரிகள் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், மாணவ மாணவிகள் பாதுகாப்பாக வீடுதிரும்புவதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். (அ-ம-26)

## தொல்லியல்...

எல்லாமதத்தவர்களின் தொல்லியலையும் நடுநிலைமையுடன் கையாளக்கூடிய திணைக்களமாக இருக்கமுடியும்? இதுவே இலங்கையில் தொடரும் பௌத்த மேலாதிக்க ஆட்சியின் ஊழலின் சின்னம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

இந்துத் தம்பதிகளான சுத்தோதனருக்கும் மாயாதேவிக்கும் பிறந்து யசோதரையைத் திருணம்செய்த சித்தார்த்தரே புத்தபிரான் ஆவார். அவரது போதனைகளைப் பின்பற்றி அவரது பஞ்சசீலக் கொள்கைகளின் அடிப்படையில் ஒழுகுவோர் பௌத்தர்கள் எனப்பட்டனர். இந்துமதமும், பௌத்தமதமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை.

ஆனால் இலங்கையில் மட்டும் அவ்வாறு இல்லை. இங்கு புத்தபிரானின் போதனைகளையும் அவரது பஞ்சசீலக் கொள்கைகளையும் கைவிட்ட சில பௌத்ததுறவிகள் அவர்களின் பின்நின்று இயக்கும் சில அரசியல்வாதிகளின் தயவுடன் இந்தநாட்டில் அமைதியின்மையையும், இனமுறுகலையும் தூண்டி வருகின்றனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இனப்பரம்பல் வீதத்தை மாற்றி அமைக்க முயலும் பேரினவாத சக்திகளின் ஊதுகுழல்களாக இந்த பௌத்த தேரர்கள் செயற்படுகின்றனர். சில பௌத்தபிக்குகள் இலங்கையின் அரச திணைக்களங்களான, மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை தொல்பொருள் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், பாதுகாப்பு படைகள் என்பவற்றை வழிநடத்தி வருவது கடந்த காலத்தில் வெளிப்படையாகவே அவதானிக்கப்பட்டது.

### நீராவியடிப்பிள்ளையார்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில், நாயாற்றுக்கு அண்மையில் உள்ள பழைய செம்மலை பிள்ளையார் ஆலயத்தை குருகந்த ரஜமகாவிகாரை எனக்கூறி கொலம்பகே மேதாணந்த கீர்த்திசிறி தேரர் என்ற பௌத்ததுறவி, ஆலய வளாகத்திற்குள் கட்டடம் ஒன்றை அமைக்கத் தொடங்கினார். கட்டட வேலைகளை ஆலயத்தின் எதிர்த்திசையில் இருந்த இராணுவமுகாமின் சிப்பாய்கள் மேற்கொண்டனர்.

சிலநாள்களின் பின்னர் இந்த கொலம்பகே மேதானந்த கீர்த்திசிறீ தேரர் மரணமடைந்தார். இவரது உடலை கடற்கரையில் அடக்கம் செய்யுமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளையிட்டது. அந்தக்கட்டளையை மீறி ஞானசாரதேரர் தலைமையான பௌத்தத் துறவிகள்குழு அவரின் பழைய செம்மலை பிள்ளையார் ஆலய தீர்த்தக்குளத்தில் அடக்கம் செய்தனர். எதிர்த்து நின்ற தமிழ்மக்களையும், சட்டத்தரணிகளையும் இலங்கைப் பொலிஸார் துரத்தித்துரத்தி அடித்தனர். பொலிஸாரால் தாக்கப்பட்டு ஆலய பூசகர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

### கொக்கிளாய் விகாரை விவகாரம்

முல்லைத்தீவு கொக்கிளாய் கிராமத்தில் நீதிமன்றக் கட்டளைகள் மீறப்பட்டு பௌத்தவிகாரை அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 1983ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து, 2011ஆம் ஆண்டில்;தான் இங்கு மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டார்கள். மணிவண்ணதாஸ்என்பவரின்குடும்பமும் அவரது காணியில் மீளக் குடியமரச் சென்றபோது, அவர்கள் விரட்டப்பட்டு அவர்களின் காணிக்குள் புத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. தாய், தந்தையை அன்பு மனையாள் யசோதரயை, அருமைப்பாலகன் இராகுலனைத் துறந்து போதிமரநிழலில் பரிநிர்வாணம் அடைந்த போதிமாதவன் புத்தபிரான் சிலையாய் அமர்வதற்காக மணிவண்ணதாஸ் அவரது மனைவி, குழந்தைகள், துரத்தியடிக்கப்பட்டு அவர்களுடைய பரம்பரை வாழ்ந்த பூர்வீகநிலம் பறிக்கப்பட்டு ஏதிலிகளாக மாற்றப்பட்டுள்ளனர். இதையா புத்தர் போதித்த பஞ்சசீலக் கொள்கை வழி நடப்பவர்கள் செய்வார்கள்.

### குருந்தூர்மலை விவகாரம்

குருந்தூர்மலை, அது ஒருதொல்லியல் பிரதேசம் என்பதனை நாம் அனைவரும் அறிவோம். விடுதலைப்புலிகளின் காலத்தில் அங்கிருந்த தொல்பொருள் சின்னங்களுக்கு இம்மியளவுகூட பங்கமேற்படவில்லை. அங்கு தொல்பொருள் சின்னங்களுள் ஒன்றாய் பல நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த திரிசூலம் ஒன்று காணப்பட்டது. அதுபலநூற்றாண்டுகளாகவே சுற்றயல் கிராம மக்களால் வழிபடப்பட்டுவந்தது. ஆனால் இன்று, வெளிப்படைத் தன்மையையும், நடுநிலைமையையும் கோஷமாகக்கொண்டு ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தின் காலத்திலும் குருந்தூர்மலையில் நீதிமன்றக்கட்டளைக்கு முரணாக வெளிப்படையற்ற செயற்பாடுகள் தொல்லியல் ஆய்வுகள் என்ற போர்வையில் தொடர்கின்றன. குருந்தூர்மலையில் கல்சமுவ சந்தபோதி தேரரரின் வழிகாட்டலில் தொல்பொருள் திணைக்களத்தினரால் இலங்கை பொலிஸாரினதும், இராணுவத்தினதும் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட அராஜகங்கள் பௌத்த தர்மத்திற்கு மட்டுமல்ல, இலங்கையின் தொல்பொருள் சட்டத்திற்கும் முற்றிலும் முரணானவை .

### வெடுக்குநாறிமலை விவகாரம்

வவுனியா மாவட்டத்தில், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரவில் அமைந்துள்ள வெடுக்குநாறிமலை வன்னியில் வாழும் இந்துக்களின் ஆதிவழிபாட்டுத்தலமாகும். கடந்த வருடம் இங்கு சிவராத்திரி வழிபாட்டிற்காக சென்றிருந்த மக்கள் இலங்கைப் பொலிஸாரால் துரத்தியடிக்கப்பட்டனர். இங்கு வழிபாடு மேற்கொண்ட பரம்பரை பூசகரும் இன்னும் 14 பேர்களும் சிவராத்திரியை வெடுக்குநாறிமலையில் அனுஷ்டித்ததற்காக, இரண்டு வாரங்கள்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இந்தவருடமும் சிவராத்திரி பூசைகள் மாலை 6 மணிக்கு பின் தொடர அனுமதிக்கப்படவில்லை. இலங்கைத்தீவில் தமிழ் இனத்திற்கு எதிராக, அவர்களுடைய வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டு, அவர்களுடைய மரபு உரிமைகள் சிதைக்கப்படும் நிலமை இன்னமும் தொடர்ந்து வருகின்றது. பௌத்த விகாரை ஒன்றையும், அசோகச்சக்கரத்தையும் தனது சின்னமாக கொண்ட இலங்கை தொல்பொருள் திணைக்களம், எவ்வாறு இலங்கையில் உள்ள எல்லாமதத்தவர்களின் தொல்லியலையும் நடுநிலைமையுடன் கையாளக் கூடிய திணைக்களமாக இருக்கமுடியும்? இதுவே இலங்கையில் தொடரும் பௌத்த மேலாதிக்க ஆட்சியின் ஊழலின் சின்னம். இந்த நாட்டிலுள்ள இந்து, பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் நான்கு மதங்களையும் ஒன்றாகப் பாருங்கள். அனைத்துமத மக்களையும் அணைத்துகொண்டு பயணியுங்கள் - என்றார். (அ-ம-26)


## மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 10 . 1932



மறைவு
17 . 03 . 2025

**அமரர் திருமதி தியாகராசா தங்கரத்தினம்**

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை ஜயனார் கோவிலடியை பிறப்பிடமாகவும் பிள்ளையார் கோவில் வீதி வட்டுகிழக்கு சித்தன்கேணியை வதிவிடமாகவும் கொண்ட அமரர் திருமதி தியாகராசா தங்கரத்தினம் அவர்கள் நேற்று (17.03.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆராச்சி நடராசா-இராசம்மா தம்பதியின் பாசமிகு புதல்வியும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு-பகவதிப்பிள்ளை தம்பதியின் மருமகளும் காலஞ்சென்ற R.M தியாகராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவரான இரட்ணகுமார் மற்றும் இராஜகுமார், இராஜகுமாரி, இராஜினி மற்றும் இராஜகுலரட்ணம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகேஸ்வரி, முத்துலட்சுமி, இராஜகுமார், இராசலிங்கம், ரேவதி ஆகியோரின் மாமியாரும், ரஜீவன், ரமேசன், அனுஷா, இரேனுயா, வினோயா, றொசான், றோசினி, மதினா, ஜனுயா ஆகியோரின் பேர்த்தியும் அபிநயன், அக்ஷயாரியா, ஆர்த்திகா, விசானா, ஆதிரன், அக்ஷன் ஆகியோரின் பூட்டியும் குமணன், அரவிந்தன், சோபிகா, விஜிந்தன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2025) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
தி.இராஜகுமார்
077 069 0261

பிள்ளையார் கோவில் வீதி
சித்தங்கேணி

(CR/44601) V-1

## விழிநீர் அஞ்சலிகள்

தோற்றம்
14 . 07 . 1939



மறைவு
14 . 03 . 2025

தும்புருவில் வீரகத்திப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா

**அமரர் செல்லப்பா கந்தையா சந்திரசேகரமுதலி**

உங்கள் புன்சிரிப்பும் புத்தெழிலும்
இத்தரணி கடந்ததுவோ?
வித்தகமும் வீரியமும் விண்ணுலகு மேவியதோ?
பற்றுறவும் சுற்றமும் பதறியழ
சிற்றுலக வாழ்வதன் இயல்பதென்று
இச்சையுடன் தும்புருவில் வீரகத்திப் பிள்ளையார்
திருவடியில் சாந்திகொள்வீர்.
ஆழ்ந்த அஞ்சலிகள்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் பிரிவால் துன்புற்றிருக்கும் உற்றார், உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் அமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**ஆலய பரிபாலன சபையினர்.**
**தும்புருவில் வீரகத்திப் பிள்ளையார் ஆலயம்.**
**வரணி.**

(CR/44595) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டலந்த அறிக்கையின்படி குற்றவியல் வழக்குத் தாக்கல்

## வலியுறுத்துகின்றார் மஹாநாம ஹேவா

கொழும்பு, மார்ச் 18

பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய சட்டமா அதிபர் திணைக்களம் குற்றவியல் வழக்குத்தாக்கல் செய்ய முடியும் என்று முன்னாள் மனித உரிமை ஆணையாளர் சட்டத்தரணி பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பட்டலந்த விவகாரம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழு தமது அறிக்கையில் பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. விரிவான சாட்சிகள் கோரப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த அரசாங்கம் பட்டலந்த விசாரணை அறிக்கையின் மூலப் பிரதியை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்யமுடியும். பட்டலந்த விசாரணை அறிக்கையில் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் மக்கள் ' உயிர்வாழும் உரிமை' உள்ளடக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உத்தேச புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின்போது மக்கள் 'உயிர் வாழும்' உரிமையை உறுதிப்படுத்தவேண்டும்-என்றார். (எ-இ)

# பட்டலந்த அறிக்கையின்படி ரணிலின் குடியுரிமையைப் பறிக்குக

## முன்னிலை சோஷலிசக் கட்சி கோரிக்கை

கொழும்பு, மார்ச் 18

**பட்டலந்த அறிக்கையை மையமாகக்கொண்டு நாடாளுமன்றத்தில் தமக்குள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் குடியுரிமையைப் பறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு முன்னிலை சோஷலிசக் கட்சியின் பிரசாரச் செயலாளர் துமிந்த நாகமுவ வலியுறுத்தியுள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பட்டலந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களைப் பொறுப்பற்ற விதத்தில் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார். அறிக்கை எங்கே என கேட்டவர், சபையில் அது முன்வைக்கப்பட்ட பின்னர் பழைய அறிக்கை பற்றி விவாதம் எங்கு நடப்பதில்லை என்ற தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார். பட்டலந்த விவகாரத்தில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே அவர் பல்வேறு கதைகளை உருவாக்கிவருகின்றார்.

பட்டலந்த அறிக்கை தொடர்பில் இரு நாட்கள் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவுள்ளது. விவாதம் நடக்கட்டும். அதன்பிறகு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். குடியு ரிமையைப் பறிப்பதற்கான சட்டவியூகம் பற்றி பரிந்துரையொன்று உள்ளது. பட்டலந்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு, நாடாளுமன்றத்திலுள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக ரணில் விக்கிரமசிங்கவின் குடியுரிமை இரத்துச் செய்யப்பட வேண்டும். வழக்குத் தொடுக்கப்பட வேண்டும்-என்றார். (எ-44)

# மகளிர்தின விழா

யாழ்ப்பாணம், மார்ச் 18

வேலணை பிரதேச செயலக மகளிர் அலகினர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினர் ஆகியோரின் இணை ஏற்பாட்டில், சர்வதேச மகளிர்தின விழா பிரதேச செயலக மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-25-9)

# பாதாளஉலகக் குழுக்களால் திணறுகிறது அரசாங்கம்!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 18

அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட பாதாளக்குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பொலிஸ் திணைக்களம் முழுமையாக அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது. அதனால் பொலிஸ் திணைக்களத்துக்கும், பதில் பொலிஸ்மா அதிபருக்கும் இடையில் முரண்பாடுகள் தோற்றம்பெற்றுள்ளன. இந்த முரண்பாடுகள் பொலிஸ் ஆணைக்குழுவரைத் தொடர்வதால் முழுப் பாதுகாப்புக் கட்டமைப்பும் பலவீனமடைந்துள்ளது. நாட்டில் சட்டம் என்பதொன்று கிடையாது என்று ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள குழுக்கள் கருதுகின்றனர். தமக்கு இணக்கமானவரை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கும் அளவுக்கு பொலிஸ் சேவை இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் சேவை மாத்திரமல்ல, பாதுகாப்பு சேவை உட்பட புலனாய்வுப் பிரிவும் இன்று அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோனை பொலிஸார் கைது செய்யமாட்டார்கள். உயர்நீதிமன்றத்தின் ஊடாக பிணை பெற்றுக்கொள்வதற்கு தேசபந்துக்குச் சாதகமான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. அதுவரையில் அவர் கைது செய்யப்படமாட்டார்-என்றார். (எ-இ)


# யாழ்ப்பாணம் மாநகர சபை

## விளம்பரஒலிபரப்புச் சேவைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள விளம்பரசேவைகள் 16.04.2025ம் திகதி முதல் 31.12.2025 ம் திகதி வரையான காலப்பகுதிக்கு ஒலிபரப்பு சேவை குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

1. கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,180.00 (வற் வரியுடன்)
2. கேள்விப் படிவம் விநியோகித்தல் - 18.03.2025 - 07.04.2025 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)
3. கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 08.04.2025 மு.ப 10.00 மணி வரை
4. கேள்வி திறத்தல் - 08.04.2025.மு.ப 10.00 மணிக்கு
5. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்ஒலிபரப்பு சேவையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 08.04.2025 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
6. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
7. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
8. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடச் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
9. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
10. குத்தகை தொடர்பான ஏனைய நிபந்தனைகளை நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.
11. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
12. கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகைத்தொகையின் 1/3 வைப்புக்கட்டணத்தை 11.04.2025 ம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தப்படவேண்டும். தவறின் தங்களது மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன் கேள்வி மனு நிராகரிக்கப்படும்.

| இல | கேள்வி அடையாள இலக்கம் | கேள்விவிபரம் | மதிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக ) | ஒப்பந்த காலம் | மீளளிக்கக் கூடிய பிணைவைப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | MC/N.M.B/F-08/B.01/2025 | விளம்பர ஒலிபரப்பு சேவை-நவீனசந்தை கட்டடத்தொகுதி மேல்மாடி | 944,435.00 | 16.04.2025 - 31.12.2025 | 18, 000.00 |
| 2 | MC/S.M/F-08/B.02/2025 | விளம்பர ஒலிபரப்பு சேவை செங்குந்தா சந்தைத் தொகுதியில் - மீன்சந்தைக்கு மேல் | 354,166.67 | 16.04.2025 - 31.12.2025 | 7, 000.00 |

மாநகர ஆணையாளர்,
மாநகர சபை
யாழ்ப்பாணம்

(CR/44597) J-1


# எண்ணெய்க்காப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம் இருபாலைப் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழாவின் எண்ணெய்க்காப்பு என்று காலை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இடம்பெறவுள்ளது. (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளுக்குத்...

இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்தமை, பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்காக இந்திய மத்திய அரசாங்கத்தால் 67 அமைப்புகள் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில், 45 அமைப்புகள் பயங்கரவாத அமைப்புகளாகவும், 22 அமைப்புகள் சட்டவிரோத அமைப்புகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அமைப்புகள் இந்தியாவில் செயற்படத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த அமைப்புகளுக்கு ஆட்சேர்ப்பது, நிதி திரட்டுவது உள்ளிட்ட செயல்களில் ஈடுபடுவது கடும் குற்றம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## பஞ்சாயுதத்தில்....

நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

336 உள்ளூராட்சி சபைகளில் பெரும்பாலான சபைகளுக்கு தனித்தே போட்டியிடவுள்ளோம். உள்ளூராட்சிசபைத் தேர்தலில் எமது அணிக்கு வெற்றி கிடைக்கும் என நான் நம்புகின்றேன். ஊருக்காகவும், நாட்டுக்காகவும் இந்தத் தேர்தலை பயன்படுத்துமாறு முற்போக்கு சக்திகளிடம் நான் கோரிக்கை விடுக்கின்றேன்-என்றார். (அ-ம-44)

## புதிய...

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சஜித் பிபெரேரா இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்குரிய மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் அரசாங்கம் வசம் உள்ளது. அதற்கு பிரதான எதிர்க்கட்சியான நாமும் ஆதரவளித்தால் பேராதரவு கிடைக்கப்பெறும். புதிய அரசியலமைப்பு அவசியம் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். எனவே, விரைவில் அதற்குரிய பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

வடக்கிலும், தெற்கிலும் அனைத்து இன மக்களினதும் ஆணையைப் பெற்றதாகவே அரசாங்கம் உள்ளது. அதை நாங்கள் மறுக்கவில்லை. மக்களின் ஆதரவு உள்ள வேளையிலேயே இந்த முக்கியமான பணியை நிறைவேற்ற வேண்டும். ஜனாதிபதி பதவியேற்று 6 மாதங்களாகின்றன. நாடாளுமன்றத்தில் 4 தடவைகள் உரையாற்றினார். எனினும், புதிய அரசியலமைப்பின் முக்கியத்துவம் பற்றி பேசவில்லை. சுதந்திர தினத்தில் உரையாற்றினார். அதன்போதும் இது தொடர்பில் குறிப்பிடவில்லை. புதிய அரசியலமைப்புக்கு பாதீட்டில் உரிய ஒதுக்கீடுகளும் இல்லை.

நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அரசியலமைப்பு சபையொன்றை உருவாக்குமாறு அரசாங்கத்தைக் கோருகின்றேன். அதற்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர்கள் குழு அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழுவுக்குத் தேவையான வளங்களை அரசாங்கம் வழங்க வேண்டும்-என்றார். (அ-ம-44)

## விரைவில்...

புதிய அரசியலமைப்பு நிச்சயம் நிறைவேற்றப்படும். இந்த விடயத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மீறப்போவதில்லை. காலத்தை இழுத்தடிக்கும் நோக்கமும் எமக்குக் கிடையாது என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் நீதி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

உரிய ஆய்வுகளுக்குப் பிறகே வளமான நாடு, அழகான வாழ்க்கை எனும் தேர்தல் விஞ்ஞாபனத்தை நாம் முன்வைத்தோம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் உட்பட புதிய அரசியலமைப்பு தொடர்பில் அதில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதியை மீறப்போவதில்லை. எனினும், எதிரணிகளின் நிகழ்ச்சி நிரலுக்கமைய எம்மால் செயற்பட முடியாது. ஐந்து வருடங்களுக்குரிய திட்டங்களே தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எல்லா விடயங்களும் முதல் ஐந்து மாதங்களுக்குள் நிறைவேற்றப்படும் என நாம் கூறவில்லை. நாட்டில் பொருளாதார நெருக்கடி இருந்தது. எனவே, பொருளாதாரத்தை உறுதித்தன்மைக்குக் கொண்டுவருவதற்கு முன்னுரிமை வழங்கிச் செயல்பட்டோம். ஊழல், மோசடியாளர்களுக்கு எதிரான நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

உரிய நேர எல்லையின் பிரகாரம்தான் அரசாங்கம் செயல்படுகின்றது. உள்ளாட்சிசபைத் தேர்தலின் பிறகு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும். அரசாங்கத்தால் வகுக்கப்பட்ட வேலைத்திட்டம் உள்ளது. அதற்கமைய புதிய அரசியலமைப்பு தொடர்பான பணியும் இடம்பெறும். அரசாங்கத்துக்குரிய செல்வாக்கு சரியாது. அது காலம் செல்லச்செல்ல அதிகரிக்கும். அரசாங்கத்தின் செல்வாக்கு குறையும் என எதிரணிகள் கனவு காண்கின்றன.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் ஆரம்பத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டியதில்லை. நிறுத்திய இடத்தில் இருந்து ஆரம்பிக்கலாம். நாம் ஒருபோதும் காலத்தை இழுத்தடிக்கப்போவதில்லை. நாய்தான் வாலை ஆட்ட வேண்டும், நாயை வால் ஆட்டுவிக்க முடியாது. எனவே, அரசாங்கம் தமக்குரிய நிகழ்ச்சி நிரலை உரிய வகையில் முன்னெடுக்கும்' என்றார். (அ-ம-44)

## வவுனியா...

முனிரத்தினம் கருணா (வயது-23) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இளைஞர் சடலமாக மீட்கப்பட்ட பகுதிக்கு அருகில் அவர் கொண்டுவந்த பை, பாதணி மற்றும் தலைக்கவசம் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-110)

## நாடெங்கும்...

போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச தாதியர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பணிப்பகிஷ்கரிப்பு நேற்றுக் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை 3 மணிநேரம் நடைபெற்றது.

2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவுகளைக் குறைத்தமை, பதவி உயர்வு முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளமை போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

2025ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளால் தாதியர் சேவைக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரையில் தாம் அனுபவித்து வந்த உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதாகவும் அரச தாதியர் சங்கத்தினர் சுட்டிக் காட்டியுள்ளனர். மேலும், வரவு செலவு முன்மொழிவுகள் மூலம் தொழில்சார் கௌரவத்திற்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. அதனை அங்கீகரிக்கவே முடியாது என்றும் அரச தாதியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். வடக்கு மாகாணத்தில் உள்ள அரச மருத்துவமனைகளிலும் இந்தப் போராட்டங்கள் இடம்பெற்றன. (அ-ம-213,110,56,26,18,125)

## யாழ்....

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ம-26)

## ஆழ்கடல்...

மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் ராஜா குரூஸ், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளர் மொஹமட் ஆலம், வடமாகாண கடற்றொழில் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா ஆகியோர், அமைச்சரை யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் பொதுமக்கள் தொடர்பாடல் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். தமிழக மீனவர்களின் அத்துமீறலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், மீன்பிடிச் சட்டத் திருத்தம், உள்ளூரில் தடை செய்யப்பட்டுள்ள மீன்பிடி நடவடிக்கை என்பன தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. இந்தக் கலந்துரையாடலின் பின்னர் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பில் ஆவணப்படமொன்றை தயாரித்துள்ளனர். அதனை எனக்கு காண்பித்தனர். அதேபோல இந்திய மீனவர்கள் எமது நாட்டுக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவது போல, உள்நாட்டிலுள்ள சிலரும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமையை கடைப்பிடிக்கின்றனர். இந்த விடயங்களும் எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. எனவே, இவற்றை தடுத்து நிறுத்தி எமது நாட்டின் கடல்வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம்.

அதேபோல் கடற்றொழிலை நவீனமயமாக்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். ஆழ்கடல் மீன்பிடிக்காக கப்பல்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு வெளிநாடுகள் முன்வந்துள்ளன. அவை ஊடாக ஆழ்கடல் மீன்பிடி ஊக்குவிக்கப்படும்'-என்றார். (அ-ம-26)

## பொலிஸ்...

விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கு ஒன்றை இல்லாது செய்வதாகக் கூறி, யாழ்ப்பாணத் தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவரின் மகன் ஒருவர் 20 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்றிருந்தார். லஞ்சம் வழங்கியவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய, தொடர்புடைய நபரைக் கைதுசெய்யுமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது

இந்தநிலையில் குறித்த சந்தேகநபர் நேற்று சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலையாகினார். இதன்போது குறித்த சந்தேகநபரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். சந்தேகநபரின் தந்தையான குறித்த பொலிஸ் அதிகாரி முல்லைத்தீவு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26,27)

## மீனவர்கள்...

மீனவர்கள் கரை திரும்பவில்லை என்று யாழ்ப்பாணம் மாவட்ட நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்து கடந்த 15ஆம் திகதி மாலை 3 மணியளவில் படகில் சென்ற இரு மீனவர்களே மீண்டும் கரை திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்களைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-27)

## யாழ்ப்பாணப்...

பட்டமளிப்பு விழா தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு, துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. இதன்போது பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும், கலைப்பீடாதிபதியுமான பேராசிரியர் சி.ரகுராம் பட்டமளிப்பு விழா பற்றிய விபரங்களை ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

39ஆவது பட்டமளிப்பு விழாவுக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

பட்டமளிப்பு விழாவில், உயர்பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்ப பீடம், இந்துக் கற்கைள் பீடம், சித்த மருத்துவ பீடம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் நாள் வவுனியா வளாகத்தைச் (தற்போது வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில், திறந்த மற்றும் தொலைக்கல்வி முறைமை மூலம் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இந்தப் பட்டமளிப்பு விழாவில் 399 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து 686 உள்வாரி மாணவர்களுக்கும், 702 திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 133 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன - என்றார். (அ-ம-26-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத் தொழிற்சங்கங்கள் இன்று பணிப்புறக்கணிப்பில்!

கொழும்பு, மார்ச் 18

சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார தொழிற்சங்கள் நாடளாவிய ரீதியில் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

இன்று காலை 8 மணிமுதல் நாளை காலை 8 மணிவரை இந்தப் போராட்டம் இடம்பெறும் என்றும், அவசர நோயாளர் சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகளின் பணியாளர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றும் சுகாதாரத் தொழிற்சங்கள் அறிவித்துள்ளன.

அரசாங்கத்துடன் நேற்று மாலைவரை நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்தே இந்த அறிவிப்பை அவை விடுத்துள்ளன.

(ம-26)

## காணவில்லை

யாழ். போதனா வைத்தியசாலை முன் வீதியில் Gargils க்கும் வேம்படி சமிஞ்ஞை சந்திக்கும் இடையில் 16.03.2025 மாலை 6 மணியளவில் கை-சங்கிலி ஒன்று தறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு : 077 665 5409

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/57653) J-1

## காணி விற்பனைக்கு

சங்கானை வீதி அச்சுவேலி மேற்கு கொன்வென்ட் பாடசாலையில் இருந்து 200m தூரத்தில் 3 பரப்புக் காணி வெற்றுக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

076 159 8003 , 076 940 1045

(CS/57765) J-1

## காணி விற்பனைக்கு

### யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் 32 பரப்பு காணி விற்பனைக்குண்டு

### நிலப்பரப்பு

- பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
- உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது
- கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது
- பயன் தரும் தென்னைகள் உள்ளன
- நல்ல சுற்று சூழல் குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை 64 லட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு: ஜெயம்

077 814 7389

077 986 5457

# மரண அறிவித்தல்



## சிவபாதசுந்தரம் சுகிர்தரெட்ணம் (சுகிர்தம்)

**(சரவணை மேற்கு நாவலடி ஞானவைரவர் பெருமான் ஆலயத்தின் தர்மகர்த்தா)**

சரவணை மேற்கை பிறப்பிடமாகவும் 3/5 பிரப்பங்குளம் லேன் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதசுந்தரம் சுகிர்தரெட்ணம் (சுகிர்தம்) 14.03.2025 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரெட்ணம் - கமலாம்பிகை தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - இலட்சுமிப்பிள்ளை தம்பமதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும் கருணானந்தன், சிவானந்தன், கௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுயந்தினி, புஸ்பகாந்தராசா ஆகியோரின் மாமியாரும், ஜதுஷன் பிரதிகா, பிரமியா, செந்தூரன், பிரஷாந்-மத்தீல் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், நேஹாவின் அன்பு பூட்டியும், காலஞ்சென்றவர்களான மகாதேவன்-இலட்சுமி, சண்முகலிங்கம்-வாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரயும் காலஞ்சென்ற வர்களான மாணிக்கத்தியாகராஜா-லோகேஸ்வரி, அச்சலிங்கம்-கமலாதேவி, மௌனசுந்தரம்-மகேஸ்வரி, ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.03.2025) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னங்கண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 13.10.1942

இறப்பு 14.03.2025

3/5 பிரப்பங் குளம் லேன்
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

மகன் : 001 514 298 9297
மகள் : 003 366 176 6034
மகள் : 076 932 1542
பேறாமகன் : 077 177 7738

தகவல்: குடும்பத்தினர்

(CS/29928) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org